## (எ) சென்மதி நிலுவையும், வெளிநாட்டுச் சொத்துக்களும் (1)

பின்னிணைப்பு IIல் உள்ள 25, அ, ஆ, இ அட்டவணைகளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளபடி, 1961ம் ஆண்டிற்கான இலங்கையின் சென்மதி நிலுவைக் கணக்குகள், அவ்வாண்டில் வெளிநாட்டு நிலுவை தொடர்ந்து பிரதிகூலமாகவே விளங்கியது என்பதைக் காட்டுகின்றது. ஆயினும், வெளிக் கொடுப்பனவு நிலைமையில் ஒரு குறிப்பிடத்தக்க சீர்த்திருத்தம் ஏற்பட்டது. 1961ம் ஆண்டு நடைமுறைக் கணக்கில் ரூபா 754 இலட்சம் குறை காணப்பட்டது. இது, தொடர்ச்சியாக 5ம் முறையாக ஏற்பட்ட ஆண்டுக் குறையாகும். எனினும் 1958ம், 1959ம், 1960ம் ஆண்டுகளில் முறையே 1529 இலட்சம் ரூபாய்களாகவும், 2080 இலட்சம் ரூபாய்களாகவும், 2205 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிய குறைகளிலும் பார்க்க, மேற்கூறியகுறை கணிசமான அளவிற் தாழ்ந்ததாகும். இவ்வாண்டு ஏற்றுமதி வருமானங்களில் ஒரு கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டபொழுதிலும், சென்மதி நிலுவையில் மேற்கூறிய சீர்த்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதுதான் 1961ம் ஆண்டின் சாதனையில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1960ம் ஆண்டுவரை படிப்படியாக அதிகரித்துக்கொண்டிருந்த இறக்குமதிகள், ஏற்றுமதிகளிலும் பார்க்கக் கணிசமான முறையில் அதிகமாக வீழ்ச்சியடைந்தன. இது வணிகப்பொருட்களின் பேரில் உள்ள குறையில் ஒரு தீட்சமான சுருக்கத்தைக் கொண்டுவந்தது. 1960ம் ஆண்டு 2080 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இக்குறை 1961ம் ஆண்டு 627 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

---

(1) இவ்வாண்டறிக்கை தொடக்கம் சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்கள் கொடுப்பதில் இரு முக்கிய மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

(அ) முதலாவது மாற்றம் வணிகப் பொருட்களின் இறக்குமதி ஏற்றுமதிகளை எடுத்துக்காட்டுகின்ற அடிப்படை சம்பந்தமானது ஆகும். முன்பு, இவையிற் சில கொள்விலை காப்புறுதிக் கப்பற்கூலி என்ற அடிப்படையிலும், வேறு சில ஏற்றுமதி விலை என்ற அடிப்படையிலும் எடுத்துக் காட்டப்பட்டன. இப்பொழுது, வழக்கமான சர்வதேச நடைமுறையைப் பின்பற்றி ஏற்றுமதிகள், முற்றுக ஏற்றுமதி விலை என்ற அடிப்படையிலும், இறக்குமதிகள் கொள்விலைக் காப்புறுதிக் கப்பற்கூலி என்ற அடிப்படையிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இது, கொள்விலைக் காப்புறுதிக் கப்பற்கூலி என்ற அடிப்படையில் முன்பு எடுத்துக்காட்டப்பட்ட ஏற்றுமதிகளைப்பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட ஏற்றியிறக்கல், காப்புறுதிச் செலவுகள், வணிகப் பொருட்களின் பெறுமதிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிக்கும், சுமை ஏற்றியிறக்கும் வெளிநாட்டினருக்கும், வெளிநாட்டுக் காப்புறுதிக்காரருக்கும் கொடுப்பதற்காகவே மேற்கூறிய செலவுகளைப் பெரும்பாலும் ஏற்றுமதியாளர் பெற்றிருந்தமையால் முன்பு கொடுக்கப்பட்ட விபரங்கள், இலங்கையினது வணிகப் பொருட்களின் ஏற்றுமதித் தொகையும் "ஏற்றியிறக்கல், காப்புறுதி" கொடுப்பனவுகளின் தொகையும் அனுவசியமாகப் பெருக்கிக் காட்டியுள்ளன. இது இப்பொழுது தவிர்க்கப்பட்டுள்ளது.

முன்பு ஏற்றுமதி விலை என்ற அடிப்படையில் எடுத்துக் காட்டப்பட்ட இறக்குமதிகளைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட ஏற்றியிறக்கல், காப்புறுதிச் செலவுகளின் வெளிக்கொடுப்பனவுகள் அறியும்படியாக உள்ளன. முன்பு "ஏற்றியிறக்கல் காப்புறுதி" கொடுப்பனவுகளின் கீழ்க்காட்டப்பட்ட இச்செலவுகள், இப்பொழுது, வணிகப் பொருட்களின் இறக்குமதிகளிற் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வழியாக இவ்இறக்குமதிகளின் பெறுமானம் பெருக்கம் அடைந்துள்ளது.

ஆகவே மேற்கூறியபடி திருப்பி அமைக்கப்பட்டதனுல் ஏற்பட்ட நிகர விளைவு பின்வருமாறு:- (1) ஏற்றுமதிகள் குறைந்த இறக்குமதிகள் பெருகி அதன் மூலம் வணிகப் பொருட்களின் குறை அதிகரிப்பு. (2) ஏற்றியிறக்கல் காப்புறுதிக் கொடுப்பனவுகள் குறைந்து அதனுல் கட்புலனுகா விடயங்களின் தொகை அதேயளவாற் குறைவது. வணிகப் பொருகளின் ஏற்றியிறக்கல் காப்புறுதி முதலியவற்றின் பேரில் ஏற்படும் வரவுகளையும் கொடுப்பனவுகளையும் இவ்வாறு திருப்பி வகுத்தமையால், நடைமுறைக் கணக்கின் பேரில் உள்ள பொதுப்படையான நிலுவை பாதிக்கப்படவில்லை.

(ஆ) இரண்டாவது மாற்றம் வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள் சம்பந்தப்பட்டதாகும். முன்பு அந்நிய நிருபர்களுடன் உள்ள பதிவேடுகளை அடிப்படையாகக்கொண்டு, வெளிநாட்டுச் சொத்துக்கள் கணக்கிடப்பட்டன. இப்பொழுது உள்ளூர்ப் பதிவேடுகளுக்கேற்ப, ஒதுக்குநிதி நிலைமையைப் பிரதிபலிக்கும் வண்ணம் திருப்பி அமைக்கப்பட்டுள்ளன. இம்மாற்றத்தின் பிரதான விளைவு, (1) இருபக்கக் கொடுப்பனவு ஒப்பந்தங்களின் கீழ் இலங்கைக்கு வரவேண்டிய மொத்த நிலுவைகள், (2) வெளிநாட்டு வங்கிகள் பணமாக மாற்றுவதற்குரிய உள்ளூர் வங்கிகளிடம் உள்ள ஏற்றுமதி உண்டியல்கள், முதலிய இரண்டும் வெளிநாட்டு ஒதுக்குநிதிகள் பற்றிய தரவுகளில் அடங்குவதேயாகும். ஒதுக்குநிதித் தரவுகளிற் செய்யப்பட்ட இம்மாற்றத்துடன், உள்ளூர்ப் பதிவேடுகளின் அடிப்படையில் சென்மதி நிலுவை பற்றிய சகல புள்ளி விபரங்களும், ஒரே சீரான முறையில் கணிக்கப்பட்டுள்ளன. வங்கிகளின் உள்ளூர்க் கணக்குகளிலிருந்தும், ஏனைய நிதிநிலையங்களிலிருந்தும் சர்வதேச ஒதுக்குநிதித் தரவுகளைக் கணிக்கும் வழக்கமான சர்வதேச நடைமுறையுடன் இது உடன்பட்டுள்ளதாகவும் விளங்குகின்றது.

1959ம், 1960ம் ஆண்டுகளில் முறையே 1992 இலட்சம் ரூபாய்களாலும், 1927 இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியுற்ற இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள், 1961ம் ஆண்டில் 83 இலட்சம் ரூபாய்களால் மட்டுமே வீழ்ச்சியடைந்தன. 1961ம் ஆண்டு நடைமுறைக்கணக்குக்குறை வீழ்ச்சியுற்றமையே ஒதுக்கு நிதி வீழ்ச்சி சிறிதாக இருந்ததற்கு உதவிய பிரதான காரணமாகவிளங்கியது. அத்துடன் வெளிநாட்டுக் கடன்கள் மூலம் கிடைத்த அதிகரித்த வரவுகளும், குறிப்பாக சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்ட 538 இலட்சம் ரூபாய்கள், 1961ம் ஆண்டில் வெளிநாட்டு ஒதுக்குநிதிகளின் பாதிப்பை மட்டுப்படுத்த உதவி செய்தன.

1961ம் ஆண்டு இறக்குமதிகளிலும், ஏற்றுமதிகளிலும் உண்டான வீழ்ச்சிக்கான காரணங்கள் ''வெளிநாட்டு வர்த்தகம்'' என்ற பகுதியில் முன்பு விரிவாக ஆராயப்பட்டன. அங்கே சுட்டிக்காட்டியபடி ஏற்றுமதிகளின் அளவு மாற்றமின்றி இருக்க, ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் தீட்சமாக வீழ்ந்தமையே, ஏற்றுமதிகளின் பெறுமானம் வீழ்ச்சியடைவதற்கு முற்றும் காரணமாக விளங்கிற்று. இதற்கு மாருக இறக்குமதிகளின் அளவுகளில் ஏற்பட்ட கணிசமான சுருக்கமே, இறக்குமதிகளுக்காகச் செய்த கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைவதற்குப் பிரதான காரணமாக விளங்கியது. இறக்குமதி விலைக்குறிகாட்டி மாற்றமின்றி இருந்தது. நுகர்ச்சிப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள், இவ்விரண்டிற்கும் நடுத்தரமான பொருட்கள் என்று பெரும்படியாக வகுக்கப்பட்ட மூன்று வகை இறக்குமதிப் பொருட்களின் தொகுதிகளிலும், இறக்குமதி செய்யப்பட்ட அளவுகளில் சுருக்கம் ஏற்பட்டது. ஆனுல் 1960ம் ஆண்டின் பிற்பகுதியிலும், 1961ம் ஆண்டின் முற்பகுதியிலும் தீர்வைக் கட்டுப்பாடுகளுக்கும், அளவுக் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்ட நுகர்ச்சிப் பொருட்கள் சம்பந்தப்பட்டவரையிலேயே அளவுச் சுருக்கம் மிகவும் குறிப்பிடத்தக்கதாக விளங்கியது. இப்பொருட்களைப் பொதுவாக போகப்பொருட்கள் எனவும், அத்தியாவசியப் பொருட்கள் எனவும் பகுத்துக்கொள்ளலாம்.

வெளிநாட்டுப் பிரயாணம், முதலீட்டு வருமானம், அரசாங்கச் செலவுகள் முதலியவற்றின் பேரில் ஏற்பட்ட நிகரக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்ததின் பயனுகவே நடைமுறைக்கட்புலனுகாக் கணக்கில் சிறிய சீர்திருத்தம் ஏற்பட்டது. பலவித கணக்குகளின் பேரில் ஏற்பட்ட நிகரக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பும், ஏற்றியிறக்கல் காப்புறுதி முதலியவற்றின் பேரில் கிடைத்த நிகர வரவுகளின் வீழ்ச்சியும் சேர்ந்து, மேற்கூறிய வெளிநாட்டுப் பிரயாணம் முதலியவற்றின் பேரில் ஏற்பட்ட கொடுப்பனவுகளின் வீழ்ச்சியளவின் பெரும்பகுதிக்குச் சமமாக இருந்தமையால் நடைமுறைக் கணக்குகளின் சீர்த்திருத்தம் சிறியதாகவே விளங்கியது.

1960ம் ஆண்டு பிரயாணத்தின்பேரிற் காணப்பட்ட வெளிக் கொடுப்பனவுகளின் குறிப்பிடத்தக்க குறைவைப் பின்தொடர்ந்து 1961ம் ஆண்டில் உண்டான வீழ்ச்சிக்கு 1960ம் ஆண்டின் பிற்பகுதியில் செலாவணிக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் மேலும் கடுமையாக்கப்பட்டதுதான் காரணமாகும். வெளியே அனுப்பப்பட்ட பங்கு லாபங்கள் முன்பிருந்ததிலும் பார்க்கச் சிறிதாக விளங்கியதின் பிரதான விளைவாகவே, 1960ம் ஆண்டில் 760 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய முதலீட்டு வருமான மொத்தக் கொடுப்பனவுகள் 1961ம் ஆண்டு 617 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைந்தன. பங்குலாபக் கொடுப்பனவுகளின் வீழ்ச்சி சென்மதி நிலுவையில் நன்மை பயக்கும் விளைவைக் கொண்டுவந்தது. 1961ம் ஆண்டு மேலும் குறைந்த வெளிநாட்டுச் சொத்துக்களின் பேரில் சம்பாதிக்கப்பட்ட வட்டியின் வீழ்ச்சியினுல், மேற்கூறிய நன்மைபயக்கும் விளைவு சிறிது குறைக்கப்பபட்டது. 1961ம் ஆண்டு அரசாங்க

கூட்டுத்தாபனங்கள், இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் முதலியவற்றின் செலவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்து, வெளிநாட்டில் ஏற்பட்ட அரசாங்கச் செலவுகளும் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டின.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து கிடைத்த வருமானங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக, ஏற்றியிறக்கல், காப்புறுதி முதலியவற்றின் பேரில் உள்ள நிகர நிலுவை சீர்கேடடைந்தது. இந்த ஆண்டில் குறைந்த கப்பல்கள் கொழும்புக்கு வந்தமையால், கப்பற்கரிகலத்தின் பேரிற் கிடைத்த வருமானங்கள் வீழ்ச்சியடைந்தன. வாடகை ஒப்பந்தங்களுக்காகவும், பிரயாணத்திற்காகவும் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் குறைந்தமையால், ஏற்றியிறக்கல்களுக்கும், காப்புறுதிக்கும் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் வீழ்ச்சிடைந்தன. ஆனுல் இவ்வீழ்ச்சி, வரவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்கக் குறைவானதே.

அட்டவணை II—50

நடைமுறைக் கட்புலனுகா விடயங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960 | | நிகர | 1961 (அ) | | நிகர |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | | வரவு | பற்று | |
| **சேவைகள்** .. .. .. | **246·4** | **285·7** | **—39·3** | **214·5** | **248·2** | **—33·7** |
| நாணயத்திற்கு அல்லாத தங்கம் (நிகர) .. | — | 1·9 | — 1·9 | — | 1·9 | — 1·9 |
| வெளிநாட்டுப் பிரயாணம் .. | 8·9 | 33·2 | —24·3 | 7·6 | 25·3 | —17·7 |
| ஏற்றியிறக்கலும், காப்புறுதியும் (1) .. | 130·1 | 54·8 | +75·3 | 114·6 | 45·9 | +68·7 |
| முதலீட்டு வருமானம் .. .. | 31·8 | 76·0 | —44·2 | 21·3 | 61·7 | —40·4 |
| அரசாங்கச் செலவுகள் .. .. | 29·0 | 50·3 | —21·3 | 27·3 | 42·6 | —15·3 |
| ஏனையவை .. .. .. | 46·6 | 69·5 | —22·9 | 43·7 | 70·8 | —27·1 |
| **நன்கொடைகள்** .. .. .. | **60·3** | **38·7** | **+21·6** | **58·6** | **37·6** | **+21·0** |
| தனிப்பட்டோர் அனுப்பியவையும், குடிபெயர்வோர் மாற்றங்களும் .. | 7·8 | 38·7 | —30·9 | 8·3 | 37·6 | —29·3 |
| அரசகரும நன்கொடைகள் .. .. | 52·5 | — | +52·5 | 50·3 | — | +50·3 |
| **மொத்தம்** .. .. | **306·7** | **324·4** | **—17·7** | **273·1** | **285·8** | **—12·7** |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மகா வங்கி

(1) இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் முறை முந்தைய அறிக்கைகளிற் கொடுக்கப்பட்டிருந்த முறையிலிருந்து வேறுபட்டது. இம்மாற்றமைப்பு 108ம் பக்கத்திற் காணப்படும் 1. (அ) அடிக்குறிப்பிலும், பின்னிணைப்பு IIல் உள்ள புதிய 25 (ஈ) அட்டவணைக்காக உள்ள அடிக்குறிப்புக்களிலும் விளக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அட்டவணை, 1950 முதல் ஒவ்வொரு ஆண்டுக்கும் உரிய சென்மதிநிலுவைத் தரவுகளின் சுருக்கத்தை திருத்தியமைக்கப்பட்ட அடிப்படையிற் கொடுக்கின்றது.

### தனிப்பட்டோர் மூலதன நடமாட்டங்கள்

1960ம் ஆண்டு தனிப்பட்டோர் மூலதனக் கணக்கின்பேரில் ஏற்பட்ட நிகர வெளியேற்றமாகிய 53 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டு இவ் வெளியேற்றம் 57 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. வெளியே செய்யப்பட்ட நேரடி முதலீட்டின் பேரில் 1960ம் ஆண்டு மூலதன நிகர வரவுகள் காணப்பட்டன. இதற்கு மாருக 1961ம் ஆண்டில் நேரடி முதலீட்டின் பேரில் மூலதன வெளியேற்றம் சிறிதாக இருந்ததெனினும், திரும்பவும் ஏற்பட்டது. கடந்த ஆண்டு அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளபடி, 1960ம் ஆண்டின் மூலதன வரவுகளுக்கு ஒரு விசேடமான காரணம் இருந்தது. இக்காரணமாவது, வெளியே, பிரதானமாக மலாயாவில் முதலீடு

செய்யப்பட்ட இலங்கையரின் மூலதனம் மீட்டெடுக்கப்பட்டமையாகும். விசேடக் கணக்கு வசதிகளைக்(1) கொண்ட தொழில் நிலையங்களின் நிலுவையின் நடமாட்டங்களையே பிரதானமாகப் பிரதிபலிக்கும் குறுகியகால மூலதன நடமாட்டங்கள், 1960ம் ஆண்டு 75 இலட்சம் ரூபாய்களைக்கொண்ட நிகர வெளியேற்றத்தைக் காட்டிற்று. இதற்கு மாறாக 1961ம் ஆண்டு இவை 31 இலட்சம் ரூபாய்களைக்கொண்ட நிகர வரவுகளைக் காட்டிற்று.

அட்டவணை II—51

நிதியீட்ட வடிவத்தில், 1959, 1960, 1961க்கான இலங்கையின் சென்மதி நிலுவைகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 (அ) |
|---|---|---|---|
| பொருட்கள் | —182·9 | —202·8 | — 62·7 |
| சேவைகள் | — 13·5 | — 39·3 | — 33·7 |
| தனிப்பட்டோர் அனுப்பியவைகளும், குடிபெயர்வோர் மாற்றங்களும் (நிகர) | — 55·9 | — 30·9 | — 29·3 |
| தனிப்பட்டோர் நிகர மூலதனக் கணக்கு | | | |
| (1) நேரடி முதலீடு | — 8·0 | + 2·2 | — 8·8 |
| (2) விசேட கணக்கு நிலுவைகளில் ஏற்பட்ட நிகர மாற்றங்கள் | + 9·7 | — 7·5 | + 3·1 |
| திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள் | — 26·6 | — 2·8 | — 4·9 |
| கொடுக்கப்பட்ட தங்கம் | | | |
| சர்வதேச நாணய நிதிக்குக் கட்டியது | — 35·7 | — | — |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குக் கட்டியது | — | — | — 0·9 |
| சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கிக்குக் கட்டியது | — | — | — 1·4 |
| மொத்த நிதியீட்டக்குறை | —312·9 | —281·1 | —138·6 |
| நிதியிட்டக் கணக்கு | | | |
| (அ) அரசகரும மூலதனமும் வங்கி மூலதனமும்* | +199·2 | +192·7 | + 8·3 |
| 1. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம் | | | |
| (i) அந்நிய உடமைகள் | +197·9 | +207·3 | — 1·9 |
| (ii) கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் ''இலங்கைக்கு வரவேண்டியவை'' | + 1·3 | — 14·6 | + 10·2 |
| 2. மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | + 66·9 | + 6·0 | + 92·9 |
| (அ) கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் ''இலங்கை கொடுக்கவேண்டியவை'' | — 18·8 | — 0·1 | + 21·3 |
| (ஆ) நீண்டகாலப் பொறுப்புக்கள்† | + 42·2 | + 26·3 | + 23·8 |
| (இ) சர்வதேச நாணய நிதியில் பெற்றது | — | — | + 53·8 |
| (ஈ) ஏனையவை†† | + 43·5 | — 20·2 | — 6·0 |
| (ஆ) அரசகரும நன்கொடைகள்††† | + 44·3 | + 52·5 | + 50·3 |
| (இ) பிழைகளும் தவறுகளும் | + 2·5 | + 29·9 | — 12·9 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மகா வங்கி

* நிதியீட்டுக்கணக்கில் உள்ள சக அடையாளம் சொத்துக்களின் வீழ்ச்சியையும் அல்லது பொறுப்புக்களின் உயர்ச்சியையும், சய அடையாளம் சொத்துக்களின் உயர்ச்சியையும் அல்லது பொறுப்புக்களின் வீழச்சியையும் குறிக்கின்றன.

† சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றவற்றையும், கனடாவிலிருந்து பெற்ற கடன்கள், ஏனைய கடன்கள் முதலியவற்றையுமே முற்றாக கொண்டுள்ளது.

†† மகாவங்கி, வர்த்தக வங்கிகள் முதலியவற்றின் இலங்கையில் வதிவற்ற கணக்கு நிலுவைகள், அமெரிக்க பொதுசனச்சட்டம் 480ன் கீழ் பெற்ற உதவியின் பயனாக எழுந்த உள்நாட்டு நிதிகளின் நிலுவை, அயல்நாடுகளிலுள்ள இலங்கையின் தூதுவராலயங்களின் நிலுவைகள் முதலியனவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கும்.

††† இலங்கை அரசாங்கம் பெற்ற கொடைகளைத்தான் அரசகரும நன்கொடைகள் என்பது குறிக்கும். பண்டங்கள் வடிவத்திலேயே இவ்வகைக் கொடைகள் பிரதானமாகப் பெறப்படுகின்றன. இக் கொடைகளில் பிரதானமானவை, ''கெயர்'' அமெரிக்க உதவியின் கீழ் பெற்ற பாலும், கோதுமைமாவும், கனடா அவுஸ்திரேலியா முதலிய நாடுகளில் இருந்து கிடைக்கும் கொழும்புத்திட்ட உதவியுமாகும்.

(1) இவ்வசதிகளின் கீழ் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்கள், செலாவணிக் கட்டுப்பாட்டின் கீழ் ஸ்டேர்லிங் கூட்டு நிலையங்களும், ஏனைய பெரிய வர்த்தகத் தொழில் நிலையங்களும் தத்தம் தலைமை அலுவலங்களுடனும், தலைமை நிலையங்களுடனும் நேரடியாக நடத்தும் இயக்கங்களைப் பிரதிபலிக்கின்றன. அடைக்கப்படாத மீதிகள் காலத்திற்கு காலம் வங்கிகள் மூலமாகத் தீர்க்கப்படுகின்றன.

நிதியீட்டக்கணக்கு

முந்தைய ஆண்டுகளிலும் பார்க்க 1961ம் ஆண்டு நிதியீட்டக்குறை கணிசமான வகையில் தாழ்வாக விளங்கியது. இது நடைமுறைக்கணக்கு நிலுவையில் ஏற்பட்ட சீர்த்திருத்தத்தைப் பிரதிபலிக்கின்றது. நிதியீட்டக்குறையின் வீழ்ச்சியுடனே இக்குறைக்கு நிதியீட்டும் முறையிலும் 1961ம் ஆண்டில் முக்கியமானதொரு மாற்றம் ஏற்பட்டது. 1959ம், 1960ம் ஆண்டுகளில் வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்து எடுத்தே இக்குறையின் பெரும்பகுதிக்கு நிதியீட்டப்பட்டது. இதற்கு மாறாக 1961ம் ஆண்டில் வெளிநாட்டிலுள்ள இலங்கையின் பொறுப்புக்களை அதிகரிப்பதின் மூலமும், அந்நியக் கொடைகள் மூலமாகவும் குறை நிவர்த்திப்புக்கு பெரும்பாலும் நிதியீட்டப்பட்டது. இதனுல் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஒரு சிறு வீழ்ச்சியே ஏற்பட்டது. 1961ம் ஆண்டு சித்திரை மாதம் 538 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அந்நிய செலாவணியை சர்வதேச நாணய நிதியிலிருந்து கொள்வனவு செய்ததின் விளைவாகவே இலங்கையின் வெளிநாட்டு பொறுப்புக்களில் ஒரு பிரதான அதிகரிப்பு ஏற்பட்டது. ஏனைய அதிகரிப்புக்களாவன:– இலங்கையின் இருபக்க ஒப்பந்தங்களின் கீழ் பெற்ற குறுகியகால கடனில் ஏற்பட்ட 213 இலட்சம் ரூபாய்களும், சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கி, அபிவிருத்திக் கடன் நிதி, ருஷ்யா முதலியவற்றிடமிருந்து பெற்ற நீண்டகால கடன்களில் ஏற்பட்ட 238 இலட்சம் ரூபாய்களும் ஆகும்.

பிரதேச அமைப்பு

நடைமுறைக்கணக்கின் பேரில் உள்ள இலங்கையின் சென்மதி நிலுவை, முந்தைய ஆண்டுகளிற் காணப்பட்ட அமைப்பையே பின்பற்றியது. அதாவது இச் சென்மதி நிலுவை, டொலர் பிரதேசத்துடன் மிகையையும், ஏனைய பிரதேசங்களுடன் குறையையும் காட்டிற்று. டொலர் பிரதேசத்துடன் உள்ள மிகை, கடந்த ஐந்து ஆண்டுகளில் காணப்பட்ட மிகையிலும் பார்க்க உயர்ந்ததாக விளங்க, ஸ்டேர்லிங் பிரதேசத்துடன், உள்ள குறையாகிய 2288 இலட்சம் ரூபாய்கள், 1957 முதல் 1960 வரையுள்ள காலத்தில் காணப்பட்ட சராசரி குறையாகிய 2900 இலட்சம் ரூபாய்களிலும் பார்க்க கணிசமான முறையில் தாழ்ந்ததாகும். ஸ்டேர்லிங் பிரதேசங்களுக்குள்ளே, பிரிட்டனுடனும், இந்தியா—பாக்கிஸ்தானுடனும் உள்ள குறைகள், 1960ம் ஆண்டுக் குறைவுகளுடன் ஒப்பிடுகையில் முறையே 1139 இலட்சம் ரூபாய்களாலும், 405 இல்ட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியுற்றன. மறுபக்கத்தில் அவுஸ்திரேலியா, மலாயா முதலிய ஏனைய ஸ்டேர்லிங் நாடுகளுடன் காணப்பட்ட மிகை ஒரு சிறிய குறைவைக்காட்டியது. இறக்குமதிகளுக்காக இப்பிரதேசத்திற்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் குறைந்தமையே, ஸ்டேர்லிங் பிரதேசத்துடன் உள்ள நடைமுறைக் கணக்கு முறையில் சீர்த்திருத்தம் ஏற்பட அநேகமாக முழுக்காரணமாக இருந்தது. 1960ம் ஆண்டில் 515 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய, ஸ்டேர்லிங் டொலர் பிரதேசமல்லா நாடுகளுடன் உள்ள குறை, 1961ம் ஆண்டில் சிறிது அதிகரித்து 602 இலட்சம் ரூபாய்களை அடைந்தது. 1957ம் ஆண்டுக்கு பின்னர் காணப்பட்ட போக்கின் தொடர்ச்சியாகவே இவ்வதிகரிப்பு விளங்கியது. ஐரோப்பிய பொருளாதார கூட்டுறவுத் தாபனத்தை சேராத நாடுகளாகிய சீனு, ஜப்பான் மத்திய கிழக்கு நாடுகள் முதலியனவற்றுடன் 1960ம் ஆண்டு உண்டான மிகைக்குப் பதிலாக, 1961ம் ஆண்டு குறை தோன்றியமையினுல் ஸ்டேர்லிங் டொலர் பிரதேசமல்லாத நாடுகளுடன் உள்ள குறை அதிகரித்தது. ஆயினும் ஐரோப்பியாக்கண்டப் பொருளாதாரக் கூட்டுறவு ஸ்தாபன நாடுகளுடன்* உண்டான குறைவாகிய 298 இலட்சம் ரூபாய்கள் முந்தைய ஆண்டிற் பார்க்க 332 இலட்சம் ரூபாய்களால் தாழ்ந்ததாகும்.

* இத்தாபனத்தைச் சேர்ந்த நாடுகள், மேற்கு ஐரோப்பிய நாடுகள், துருக்கி, கிரேக்கநாடுகளாகும்.

### அட்டவணை II—52

### நாணயப்பிரதேசங்களின்படி 1960, 1961க்கான நடைமுறைக்கணக்கு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960 | | | 1961 (அ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | நிகர | வரவு | பற்று | நிகர |
| 1. டொலர் பிரதேசம் .. .. | 346·6 | 144·6 | +202·0 | 336·1 | 122·5 | +213·6 |
| 2. ஸ்டேர்லிங் பிரதேசம் .. | 1,041·5 | | | | | |
| (i) பிரித்தானியா .. .. | 618·1 | 1,412·4 | —370·9 | 1,024·5 | 1253·3 | —228·8 |
| (ii) இந்தியாவும், பாக்கிஸ்தானும் | 77·0 | 795·2 | —177·1 | 615·3 | 678·5 | —63·2 |
| (iii) ஏனையவை .. .. | 346·4 | 319·5 | —242·5 | 75·3 | 277·3 | —202·0 |
| 3. ஸ்டேர்லிங், டொலர் பிரதேசங் | | 297·7 | +48·7 | 333·9 | 297·5 | +36·4 |
| கள் அல்லாத ஏனையபிரதேசங்கள் | 714·6 | | | | | |
| (i) ஐரோப்பாக்கண்ட பொருளா | | 766·1 | —51·5 | 632·2 | 692·4 | —60·2 |
| தாரக் கூட்டுறவுத்தாபனம்.. | 210·0 | 273·0 | —63·0 | 187·6 | 217·4 | —29·8 |
| (ii) ஏனையவை .. .. | 504·6 | 493·1 | +11·5 | 444·6 | 475·0 | —30·4 |
| மொத்தம் .. .. | 2,102·7 | 2,323·2 | —220·5 | 1,992·8 | 2,068·2 | —75·4 |

மூலம்: இலங்கை மகா வங்கி

(அ) தற்காலிகமானவை.

முந்தைய மூன்று ஆண்டுகளில் காணப்பட்ட அதே பருவகால அமைப்பையே சீர்த்திருத்தம் அடைந்த சென்மதி நிலுவை கொண்டதாக விளங்கியது. அதாவது, ஆண்டின் முதலாம் நான்காம் காற்பகுதிகளில் நடைமுறைக் கணக்கு இரண்டாம் மூன்றும் காற்பகுதிகளிலும் பார்க்க அனுகூலமாக விளங்கிற்று. முதலாம், நான்காம் காற்பகுதிகளில் வழக்கமாக ஏற்றுமதி வருமானங்கள் உயர்ந்து காணப்படுகின்றது என்பதும், இரண்டாம், மூன்றும் காற்பகுதிகளில் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகள் பெரியளவாக உள்ளது என்பதும்தான், இதற்குரிய விளக்கமாகும். 1961ம் ஆண்டு மூன்றும் காற்பகுதியில் அரசாங்கத்தின் உணவு இறக்குமதிகளுக்காக கொடுக்க வேண்டியனவற்றை ஒன்று சேர்த்து கொடுப்பனவு செய்தமையால் இப்பகுதியில் குறை மிகவும் குறிப்பிடத்தக்க பெரியனவாக விளங்கிற்று.

#### அந்நிய ஒதுக்கு நிதிகள்

1961ம் ஆண்டு இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள் 83 இலட்சம் ரூபாய்களால் மாத்திரம் வீழ்ச்சியுற்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளிலும் பார்க்க இது கணிசமான அளவிற் தாழ்ந்ததாகும். இது, முன்னரே குறிப்பிட்டபடி சென்மதி நிலுவையில் ஏற்பட்ட அடிப்படைச் சீர்த்திருத்தத்தையே பிரதானமாகப் பிரதிபலிக்கின்றது. இச்சீர்த்திருத்தத்தை நடைமுறைக் கணக்குக் குறையில் உண்டான ரூபா 1450 இலட்ச வீழ்ச்சி எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் இலங்கையின் குறுகியகால, நீண்டகால பொறுப்புக்களில் ஏற்பட்ட ரூபா 930 இலட்சம் கொண்ட அதிகரிப்பும், வெளிநாட்டு ஒதுக்கு நிதியின் குறைந்த வீழ்ச்சிக்கு, ஓரளவு காரணமாயிருந்தது. சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்ட ரூபா 538 இலட்சம், பின்னர் கூறிய அதிகரிப்பில் முக்கிய அம்சமாக விளங்குகின்றது.

சென்மதி நிலுவையின் பொதுவான நிலவரத்திற் குறிப்பிடத்தக்க சீர்த்திருத்தம் ஏற்பட்ட பொழுதிலும், 1961ம் ஆண்டின் இறுதியில் ரூபா 5330 இலட்சமாக விளங்கிய வெளிநாட்டு ஒதுக்குநிதி நிலைமை, பல காரணங்களுக்காக

திருப்திகரமானது எனக் கருதமுடியாது. ஏனெனில், முதலாவதாக 1961ம் ஆண்டில் அதிகரித்த அந்நிய பொறுப்புக்கள் ஏற்பட்டமை; இரண்டாவதாக, ஏற்றுமதி விலைகளில் தேக்கம் ஏற்படக்கூடிய தன்மை கடந்த சில மாதங்களில் அதிகரித்தமை; மூன்றாவதாக பொருளாதார அபிவிருத்தி ஆக்க வேலைகள் தீவிரமடையும் பொழுது குறிப்பாக மூலதனப் பொருட்களுக்காக, உள்ள கேள்வி அதிகரித்தமை; ஆகவே உள்நாட்டுப் பணவிரிவைத் தடுக்கும் கடுமையான கட்டுப்பாடுகளுடன், இறக்குமதிகள் மற்றும் ஏனைய அந்நிய கொடுப்பனவுகளையும் மட்டுப்படுத்தும் கொள்கை, தொடர்ந்தும் அவசியமாகின்றது.

குறிப்பு: வர்த்தக நிலுவையும், வணிகப் பொருட்கணக்கும்

வெளிநாட்டு வரவுகள், கொடுப்பனவுகள் முதலியவற்றைக் கொண்ட செலாவணிக்கட்டுப்பாட்டுப் பதிவேடுகளை, சென்மதி நிலுவைக் கூற்றுகள் ஆதாரமாகக் கொண்டுள்ளன. நேர வித்தியாசங்களினாலும், தழுவும் பகுதிகளின் வித்தியாசங்களினாலும், சுங்க வருவாய் விபரங்களிலிருந்து கணிக்கப்பட்ட வர்த்தக நிலுவையிலிருந்து சென்மதி நிலுவைக்கூற்றில் காட்டப்பட்டுள்ள வணிகப் பொருள் நிலுவை வித்தியாசப்பட்டுள்ளது.

நேரம்: பொருட்களின் உண்மையான நடமாட்டத்திற்கும், அப்பொருட்களுக்காகச் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கும் இடையே பொதுவாக காலதாமதம் ஏற்படுகின்றது. 1960ம் ஆண்டின் பிற்பகுதி முதல் காணப்பட்ட இறக்குமதிகளின் வீழ்ச்சியுடன் இறக்குமதிகளுக்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளும் ஒரு வீழ்ச்சிப் போக்கை நேரவித்தியாசத்துடன் காட்டின. இவ்விதமாக, 1961ம் ஆண்டு இறக்குமதிகளுக்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள், அவ்வாண்டிற் பெற்ற வணிகப்பொருட்களிலும் பார்க்க உயர்ந்து விளங்கின. இந்த அம்சம், 1960ம் ஆண்டு பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்காக, 1961ம் ஆண்டின் முற்பகுதியில் அந்நாட்டுக்குச் செய்யப்பட்ட பெரிய கொடுப்பனவுகளாலும் விளக்கப்பட்டுள்ளது.

தழுவும் பகுதி: ஏற்றுமதிகள் சம்பந்தமாகவே பிரதான வித்தியாசமுள்ளது. வர்த்தகத் திரட்டுகளுக்கேற்பதாக விளங்கும் ஏற்றுமதிகள், திருப்பி ஏற்றுமதி செய்யப்படும் எண்ணெயையும், மற்றும் ஏனைய எரிபொருட்களையும் அடக்கும். சர்வதேச பாகுபாட்டைப் பின்பற்றி, திருப்பி ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களாகிய இவ்விடயம் ஏற்றியிறக்கலின் பயனாக கிடைக்கும் வருமானங்களாகச் சென்மதி நிலுவைக்கூற்றில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு இடம்விட்டுச் சீராக்கிய பின்னர் வர்த்தகத் திரட்டுகளுக்கேற்பவும், செலாவணிக்கட்டுப்பாட்டுப் பதிவேடுகளுக்கேற்பவும் அமைகின்ற ஏற்றுமதி எண்தொகைகள் ஒன்றுக்கொன்று நியாயமான வகையில் ஒத்திருக்கின்றன.